
# குருதேவர்

## ஞாலகுரு
## சித்தர்
## அரசயோகிக்
## கருவூரூர்
## அவர்களின்

# எழுத்துக்கள்

மெய்யான இந்துமத
ஆண்டு 43,73,111
ஐப்பசி மாத வெளியீடு



## அருட்படை வியூக அமைப்புச் சிந்தனை ஓலை

16.2.84இல் உலக அருளாளர்கள் அறிவித்த வியூகம் பற்றிய சிந்தனையின் கீற்றாக 18.2.84இல் இந்த அ.வி.அ.சி.ஓ. அருள்மிகு பதினெட்டாம்படிக் கருப்புகள் சன்னிதானம், திருமாலாச்சாரியார் அம்மையப்பர் ஆதினம் சித்தரடியான்

மதுரை-10] அவர்கள் மூலம் அனைவருக்கும் அறிவிக்கப் படுகிறது.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! நம்மவர்கள் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளில் தேர்ந்திட அன்றாடம் பகலில் 11-1½யும் இரவில் 11-1½யும் ஞாலகுரு சித்தர் கருவூரார் திருவோலக்கத்திலும் அமர்ந்து அருட் கொடை வழங்குகிறார். இதற்குத் துணையாக அனைத்துத் திருக்களும், தருக்களும், குருக்களும், கருக்களும், தாத்தாக்களும், ஆத்தாக்களும், உலக அருளாளர்களும் அருளாட்சி நாயகங்களாகப் பொறுப்பு ஏற்றுள்ளார்கள். எனவே, கலசப் பூசை செய்பவர்களின் தரம், திரம், தீரம், உரம், மறம், அறம், வீரம், ... முதலியவற்றிற்கேற்ப குருவை அருவ அருவுருவ உருவ சாயா மாயா நிலைகளில் கண்டு அருட்பயன் பெறலாம். தெரிந்தவர் தெரிந்து புரிந்தவரையில் புரிந்து செயல்படுக.

2) தங்களின் 15-2-84ஆம் நாளைய அஞ்சலின்படி "... நான் நமது இயக்கத்திற்குச் சுமார் எட்டு மாதத்திற்கு முன்பிருந்து என்னை அர்ப்பணித்து வருகிறேன்.... திருமந்திற ஓலை நாயகம் அனுமதியுடன் [சேவுகன்] கையில் கொடி ஏந்தி அருள்வாக்குகளும் சொல்லுகிறேன். நான் எனது உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அருட்பணிக்குத் தியாகம் செய்து விட்டேன். நான் குருவின் ஆணைப்படி அன்றாட வேலைகளைச் செய்வேன்...." என்று எழுதியுள்ள வாசகங்களை அப்படியே ஏற்கிறோம்; நம்புகிறோம். எனவே, **அருட்படை வியூக நாயகம்** என்ற பதவியும் அலுவலும் வழங்கப் படுகின்றது. தங்களுக்குப் புதிய அருட்பட்டத்துக்கு உரிய அருளாட்சித் தாக்கீது ஒன்றை வீரமாகாளி சன்னிதானத்தின் {மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.}

3) இன்றுள்ள மதுரையை 1. ஆலவாய் மூதூர், 2. முக்கூடல், 3. கூடல்மாநகர், 4. மதுரை என்று நான்கு பெயர்களில் பதினெண்சித்தர்கள் அருளாட்சிக்கு உரியதாக்கி யிருக்கிறார்கள். எனவே, எமது அருளாட்சி அமைப்புப் பணியில் அருட்படைக்கு வியூகம் அமைக்கும் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைக்கின்றோம் யாம்.

குறிப்பு:- 1. அ.வி.தி.தலைமைச் செயலாளர் சேவுகன், 2. அருளாட்சி நாயகம் மேலமடைப் பாண்டியன், 3. அருட்சேனைத் தளபதி சண்முகம், 4. அ.வி.தி. நிர்வாக ஒழுங்குக் கண்காணிப்பாளர் இராசு நாயுடு, 5. அ.வி.தி. கொள்கை விளக்கப் பொறுப்பாளர் நீலமேகம் பிள்ளை, 7. சித்தர்நெறித் தத்துவ விளக்க நாயகம் வேம்படியான் மணி, 7. சித்தர்நெறி வளர்ச்சி நிறுவனங்களின் [சங்கம் - மன்றம் - கழகம் ...] அமைப்பாளர் மருதமுத்துப் பிள்ளை, 8. சித்தர்நெறி வார வழிபாட்டுக் குழு நெறியாளர் வெ.செகதீசன் [வாராவாரம் கோயில்களுக்கு சன்னிதான உடையில் கொடிபிடித்துச் சென்று வழிபாடு செய்யும் சித்தர்நெறி.... ] .... ஆகியவர்களையும் பிற அருட்பட்டத்தார்களையும், ஆர்வலர்களையும், ஆதரவாளர்களையும் விரைவில் அறிவிப்புச் செய்து ஒன்று கூட்டி இந்த வியூகச் சிந்தனைகளைச் செயலாக்க முற்படுங்கள்.

4) நம்மவர்களுக்கு இங்கு குறிக்கப்படும் அருட்பட்டங்களை வழங்கி 1. காரியேந்தல்பட்டி, 2. தச்சனேந்தல், 3. அருள்தாசுபுரம், 4. வேம்படியான் மணி இல்லம், ... முதலிய இடங்களில் இனி அமைக்கும் அ.வி.தி. நிலையங்களிலும் நான்கு வகைப் பீடாதிபதிகளும், நான்கு வகை ஆச்சாரியார்களும், நான்குவகை வாள்களும் ஆக **இப்பன்னிரண்டு பேர்களும் ஒன்றுகூடி நிகழ்த்தும் அருட்பணிகள்தான் சிறந்த வெற்றியைப் பெறும்** என்பதை உணர்ந்தும் உணர்த்தியும்

செயல்படுவதே **<u>அருட்படைக்கு வியூகம் அமைப்பதில் உள்ள நுட்பம்</u>**. அருட்சேனைத் தளபதி பொறியியல் பட்டதாரி (B.E.) என்பதால் இந்தப் பன்னிரண்டும் (X) நான்கு ஊர் பெயர்களுடன் பொருந்திட பிறக்கும் (12 X 4 = 48) நாற்பத்தெட்டு அருட்பட்ட வகையினரை உருவாக்கித் தருவார். இவர்களே ஒன்பது கோள்கள் + பன்னிரண்டு இராசிகள் + இருபத்தேழு விண்மீன்கள் = **<u>நாற்பத்தெட்டு மண்டலப் படிகள் [நாயகங்கள்] என்று போற்றப்படும் அருளாளர்களான இவர்களே வியூகத் தளபதிகளாக இருந்து அருட்படையை நடத்திப் போர் முடித்து அருளாட்சி அமைப்பர்</u>** என்பதுதான் குருபாரம்பரிய வாசகம்.*

[* " ... பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி மூவேந்தர் ஆட்சியைக் காக்க அருட்படை திரட்டத் திட்டம் தீட்டியும் செயலாக்காததால் தமிழ்மொழி காத்த பாண்டியப் பேரரசு முதலில் தமிழினப் பகைவர்களால் அழிக்கப்பட்டது. இம்மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியின் ஒரு பகுதிதான் சிலப்பதிகாரக் காப்பியத்தில் விளக்கப்படுகிறது. அதாவது இமயமலைச் சாரலில் இருந்து பிராகிருத மொழி பேசும் களப்பிறர், தரை வழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத்திருந்த போது; கங்கை கடலோடு கலக்குமிடத்து இருந்து பாலிமொழி பேசும் கலப்பிறர் கடல் வழியாகப் படையெடுத்து வந்து பாண்டியப் பேரரசைத் தாக்கக் காத்திருந்தனர். அப்பொழுது எதிர்பாராத விதமாகப் பூம்புகார் பெருவணிகர் இருவரில் ஒருவர் மகனும் மற்றொருவர் மருமகனுமான கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியால் கண்ணகியின் பத்தினித் திறத் தெய்வீக ஆற்றலும் வணிகப் பெருங்குடியினரின் சீற்றமும் மதுரை மாநகரை புயலில் அகப்பட்ட வாழைத் தோட்டமாக்கிற்று. இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சிறைப்படுத்திக் கொணர்ந்த ஆயிரக்கணக்கான ஆரியர்கள் சூழ்ச்சி செய்து கலப்பிறர்களைக் கடல் வழியாகவும், களப்பிறர்களை தரை வழியாகவும் பாண்டியப் பேரரசைச் சூறையாடச் செய்தனர். தமிழினம் பேணவும், தமிழ்மொழியை வளர்க்கவும், காக்கவும் முற்படும் மதுரை மாநகர் மீண்டும் தமிழ்மொழி வளர்க்கவும், காக்கவும் முற்பட முடியாத அளவு தமிழுணர்வும், பற்றும், பாசமும், ஆற்றலும், ஆர்வமும், நாட்டமும், ஈடுபாடும் முழுமையாக அழிக்கப்பட்டன. தமிழ்ப் புலவர்கள் வெட்டியெறியப் பட்டார்கள். தமிழ் சுவடிகளுக்குப் படியெடுப்போர் மாறுகால் மாறுகை வாங்கப் பட்டார்கள். தமிழ்ச் சுவடிகள் எரிக்கப் பட்டன. தமிழ்ச் சங்க மாளிகைகள், தமிழ்ச் சுவடிக் கோட்டங்கள், பட்டிமன்றக் கூடங்கள், தமிழாசிரியர் கோயில்கள் (சமாதுகள்), தமிழ்ப் பள்ளிகள், தமிழ்க் குருகுலங்கள், கூத்து மண்டபங்கள், பாணர் இருக்கைகள், விறலிச் சாலைகள், தமிழ்வாணர் முற்றங்கள், தமிழ் மாணுக்கர் முற்றங்கள், ... என்பன எல்லாம் இடிக்கப்பட்டுக் கழுதையேர் பூட்டி உழப்பட்டன. இப்படித் தமிழினப் பகைவர்கள் தமிழ்மொழியை வடிவும், வாழ்வும், வளமும், வலிவும், வரலாறும் இல்லாமல் அழித்து ஒழித்தே தமிழர்களைக் கோழைகளாகவும், அடிமைகளாகவும் ஆக்கினர். தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றோ! பாசமோ! பிடிப்போ! பெருமையோ! ஈடுபாடோ! உரிமையோ! இல்லாமல் செய்தால்தான் தமிழர்களை என்றென்றும் அடிமைகளாகவும் கோழைகளாகவும், போலிகளாகவும், கூலிகளாகவும் வைத்திருக்க முடியுமென்பதை உணர்ந்த ஆரியர்கள்; சித்தர்கள் தமிழ்மொழி போல உருவாக்கிட முயற்சித்து அறைகுறையாகப் படைத்த சமசுக்கிருத மொழியையே தமிழர்கள் உயர்ந்ததாக, பெரியதாக, அரியதாக, கடவுட் தன்மையுடையதாக, எல்லாவிதப் பூசைகளுக்கும் உரியதாக ஏற்கும்படிச் செய்தனர். அதாவது, தமிழை உரிமையிழக்கும்படி செய்வதும் தாழ்த்துவதும், பழிப்பதும், புறக்கணிப்பதும், வளராமல் தடுப்பதும், வலிமையடையாமல் செய்வதும்தான் தமிழர்களைக் கோழைகளாக, கூலிகளாக, காலிகளாக, போலிகளாக, வேலியற்றவர்களாக, தாலியற்றவர்களாகச் செய்திடும். அதனுல், சேரநாட்டையோ,

சோழ நாட்டையோ அடிமைப்படுத்துவதை விடப் பாண்டிய நாட்டை ஆரிய மொழியாலும், ஆரியக் கூத்தாலும், ஆரிய மதத்தாலும், ஆரிய அழகாலும், ... என்றென்றும் அடிமைப்படுத்தி, வேறுபடுத்தி, கூறுபடுத்திச் சிதைப்பதிலேயே வட ஆரியர்கள் கண்ணுங் கருத்துமாயிருந்தனர் ....” என்ற குருபாரம்பரிய வாசகம் கண்டுதான் தமிழ் வளர்ச்சிக்காக இலக்கண இலக்கியங்களைப் படியெடுக்கும் பணியும்; தமிழின் கடவுட் தன்மையும், பிற பெருமைகளும் உணரப்படுதற்காக **அருட்பணி விரிவாக்கத் திட்டமும்**, தமிழின விடுதலைக்காகவும், தமிழ்நாட்டுத் தன்னாட்சிக்காகவும் **இந்து மறுமலர்ச்சி இயக்கமும்**, மதத்தால்தான் தமிழர்களை ஒற்றுமைப் படுத்தி இனப்பற்றும், மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் பெற்றிடச் செய்ய முடியும் என்பதற்காகக் **கடவுளை வழிபடுவோர் கழகமும்** .... .... ... உருவாக்கினோம். ஆனால், ஆரியச் சூழ்ச்சிகள் வென்று தமிழர்களே தமிழ்மொழிப் பகைவர்களாகவும், தமிழினத் துரோகிகளாகவும், தமிழ்நாட்டு விரோதிகளாகவும், ... பெருவாரியாகச் செயல்பட்டிட்டதால் தவத்திலும், தமிழ் வளர்ப்பதிலும், மீனாட்சியம்மன் ஆலயத்தைப் புதுப்பிப்பதிலும் எம்மாலான பணியைச் செய்து ஒதுங்கி ஒளிவில் ஒடுக்கம் பெறுகிறோம். 1) கண்டப்பக் கோட்டைச் செம்பருத்திப் பிள்ளையும், 2) மிளகாய்ச் சாமி பிள்ளையும், 3) முத்துக்கூற்றத்து அம்பலமும், 4) கம்பண்ண உடையாரும், 5) நாச்சியப்பக் கவுண்டரும், 6) சொக்கேச முதலியாரும், 7) அரியநாத முதலியாரும், 8) தெய்வமலை நாயக்கரும், 9) இராமேசுவரம் கொண்டருளிய சேதுபதியும், 10) இராமநாதபுரத்துத் தேவரும், 11) அழகர்மலைக் கோனாரும், 12) திருச்சி முதலியாரும், 13) சிதம்பரம் கணக்கரும், 14) திருநெல்வேலிப் பிள்ளையும், 15) திருச்செந்தூர் பண்டாரமும், 16) கன்னியாகுமரிப் பட்டரும், 17) திருவானைக்கா தீட்சதரும், 18) மாயவரம் தேசிகரும், 19) கும்பகோணம் ஓதுவாரும், 20) தஞ்சாவூர் மேளக்காரரும், 21) முசிறிப் பிள்ளையும், 22) அவினாசிப் பிள்ளையும் 23) குமாரபாளையம் செட்டியாரும், 24) திருப்பத்தூர் சேர்வையும், 25) கடலூர் படையாச்சியும், 26) ஆரணி முதலியாரும், 27) வேலூர் அப்பாத்துரைப் பிள்ளையும் ... குறிப்பிடும்படியான பணிகளைத் துணையாக எமக்குச் செய்தார்கள். இருந்தாலும் எம்மிடம் உருவானவர்களில் மந்திரவாதிகளும், சூன்யக் காரர்களும், அரைகுறைச் சோதிடர்களும், வெம்பிப் பழுத்த பூசாறிகளும், முழுமை பெறுத சிற்பிகளுமே அதிகம், அதிகம், அதிகம், .... யாமும் தோற்றே, தமிழினம் காக்கவியலாமல் ஒடுங்கி நிறைகிறோம். ...”

என்று கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏனம்பட்டியார் உ.இராமசாமிப்பிள்ளை எனும் கருவூரார் தமது கடைசிக் காலத்தில் எழுதியிருக்கிறார்.

**குறிப்பு:-** இவர் குறிப்பிடும் குருபாரம்பரிய வாசகங்களை அடிப்படையாகக் கொண்டே எமது தந்தை காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் ‘The Fall of Madurai’, ‘The Destiny of the Two Great Cities’, ‘The Rise and Fall of the Tamils’, ‘The History behind the Great Epic Chilappathikaaram’, ‘The contributions to the World History by the Siddhars’, ‘The Secrets of the Aryans’ ever success’, ‘The Downfall of the Induism’, ‘The Aryans’ capture of Induism’, ‘The Sources of the Ever-slavery of the Tamils’ ... என்ற ஆங்கில நூல்களை எழுதினார். யாம், இவற்றை அடிப்படையாகக் கொண்டே ‘மதுரை மாநகர் எரிகிறது’, ‘தமிழின வீழ்ச்சி’, ‘தமிழினத் தாழ்ச்சியும் மீட்சியும்’, ‘The Fall and Rise of the Tamils’, ‘ஆரிய வெற்றி’, ‘இந்துமதம் சிதைந்தது’, ‘தமிழினத்தின் மீளா அடிமைநிலை’, ‘பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி’, ‘தமிழினப் பேரழிவு’ ‘சங்க இலக்கியங்கள் பிறந்தன’, ‘தமிழின விழிச்சி தமிழின் செழுச்சி’, ‘தமிழின் வீழ்ச்சி தமிழின தோல்வி’, ‘இந்துமத மறுமலர்ச்சி’, ‘தமிழ் இந்தியா’, ‘தமிழரும் ஆரியரும்’ ... என்ற

நாடகங்களை எழுதினோம். ஆனால் யாம் நாடகக்கலை முதலாளித்துவத் தலைவனாக மாறிவிடக் கூடாது என்று எந்தை கண்டித்ததால் அவையெல்லாம் கிடப்பில் போடப்பட்டு விட்டன. ]

5) இக்குருபாரம்பரிய வாசகப்படியே அருளாட்சி அமைக்கும் பொறுப்புக்காகப் பிறப்பெடுத்த நாற்பத்தெட்டாவது வயதில் நாற்பத்தெட்டுவகைப் பட்டமுடைய அருட்சேனைத் தளபதிகளை உருவாக்கும் பணியை 16/2/84இல் அருளாணை! மருளாணை! திருவாணை! குருவாணை! கருவாணை! தருவாணை! என்று ஆறுவகைப்பட்ட ஆணைகளைத் தாத்தாக்கள் ஆத்தாக்கள் துணையோடு விடுத்துத் துவக்குகிறோம் யாம். அதுவும் 19/12/83இல் பொன்னேரியிலிருந்து மாலையில் வீடு திரும்பும் போது எண்ணூர் இரயில்வே பாலத்தருகில் **<u>யாம் உருவான இடங்களில்</u>** [*நிர்வாணமாக உலவியது; சில தவங்கள், பல வேள்விகள், சில அத்திறங்கள், சில யாகங்கள், சில ஓகங்கள், பல ஓமங்கள், பல மாந்தரீக, ஏந்தரீகத் தாந்தரீகப் பூசைகள் ... செய்து அருட்பயிற்சிக்ளும், முயற்சிகளும் செய்த இடம். இது தீவு. இதுபோல் திருச்சி சீரங்கம் தீவில் மூன்றாண்டுக்காலம், சிதம்பரம் கொள்ளிட நடுத்திட்டுத் தீவில் ஐந்தாண்டுக்காலம், இலங்கைத் தீவில் முப்பத்திரண்டாண்டுக் காலம் ... தொடர்பு கொண்டோம் யாம். மாலத் தீவுகள், அந்தமான் நிக்கோபார் தீவுகள், இலட்சத் தீவுகள், மால்டாத் தீவுகள், பம்பாய்த் தீவுகள்... முதலியவையும் எம்மோடு தொடர்புடையவைதான்.*] ஒன்றான மர்மத் தீவு எனப்படும் **'மாயத்தீவு'** அருகில் முழுநிலவில் வானில் சுடரொளி மின்னல் எழுத்துக்களால் உலக அருளாளர்களால் **'இந்துமதத் தந்தை', 'குருமகாசன்னிதானம்' 'ஞாலகுரு சித்தர் கருவூரார்'** என்று எம்மைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தியே அருளாட்சி அமைப்புப் பணியைத் துவக்குமாறு அறிவிப்புச் செய்ததை இதுநாள் வரை பல ஆய்வுகள் செய்தும் அனைத்துத் திருக்களின் ஒப்புதல்களையும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் சம்மதங்களையும் பெற்றே இப்போது செயலாக்குகிறோம். எனவே, **<u>சித்தரடியான் இரா.அழகுமலையாகிய தங்களை அருட்படை வியூக நாயகம்</u>** என அறிவித்து அருட்படையை வளமும் வலிவும் பெறச் செய்யப் பணிக்கிறோம். திறம்படச் செயல்படுங்கள்.

6)

I. **<u>நான்குவகைப் பீடாதிபதிகள்</u>**:- ஏமகோடிப் பீடாதிபதி, காமகோடிப் பீடாதிபதி, சோமகோடிப் பீடாதிபதி, வாமகோடிப் பீடாதிபதி.

II. **<u>நான்குவகை ஆச்சாரியார்கள்</u>**:- 1. இறைமையாச்சாரியார், 2. கடவுளாச்சாரியார், 3. தெய்வீகாச்சாரியார், 4. தேவாச்சாரியார்.

III. **<u>நான்குவகை வாள்கள்</u>**:- 1. அரியவாள், 2. கூரியவாள், 3. சீரியவாள் [நேரியவாள் என ஏட்டில் பாடவேறுபாடு], 4. பெரியவாள்.

இப்பன்னிரண்டு பேர்களும் 1. ஆலவாய் மூதூர், 2. முக்கூடல், 3. கூடல் மாநகர், 4. மதுரை என்னும் ஒவ்வொரு பெயரோடும் பலவகையாகச் சேர்க்க அருட்சேனைக்குரிய **பல வரிசை நாற்பத்தெட்டு அருட்சேனைத் தளபதிகள்** கிடைப்பார்கள். இவர்களில் **<u>பன்னிரண்டு பேர்களாவது</u>** ஒவ்வொரு அ.வி.தி. நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் நிகழ்த்தப்படுபவை முழுவெற்றி பெற முடியாதவையாகிடும். **<u>குருவாணை 18/12/84</u>**. **இந்துமதத் தந்தை குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

7) அருள்தாசபுரம் போல் வேம்படியான் மணி வீடும், பல புதிய அ.வி.தி. நிலையங்களும் விரைந்து மதுரைக்குள் தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

8) அ.வி.தி. நிறுவன [அமைப்புப் பொறுப்பாளர்] அமைப்பாளர் பெரி.முத்தையா பொதுமக்களில் யாராக இருந்தாலும் முதல்முறையாக ஒரே ஒரு தடவைதான் அருட்கணிப்பு வழங்க வேண்டும். மறுபடி அருட்கணிப்புச் செய்வதெல்லாம் மற்றவர்கள்தான். [சண்முகானந்தன், செகதீசன், வேம்படியான் மணி, இரா.அழகுமலை முதலியோர்]

அருட்கணிப்புச் செய்ய வேண்டும். இது **குருவாணை.** 18/2/84. மாதம் இரண்டுமுறை முழுநிலவு நாளிலும் அமாவாசையிலும் நம்மவர்கள் ஏதேனும் ஓர் இடத்தில் கூடி மாவட்டத்தார்களின் அஞ்சல் தொடர்புகளையும் படித்துக் காட்டிக் கொள்கை நிலை, செயல்நிலை விளக்கங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். புதிய புதிய திட்டங்களைத் தீட்டிக் கொள்ளுங்கள். இதுதான் அ.வி.தி.யை முறையாகவும் முழுமையாகவும் விரைந்து வளர்க்க முடியும். நாட்டின் நாலாப் பக்கமும் நம்மவர்கள் விரைந்து சென்று அ.வி.தி. நிலையங்களை அமைத்து அருளை அநுபவப் பொருளாக வழங்கி இந்துமதப் பேருண்மைகளை விளக்க வேண்டும்.

குறிப்பாக:-

1. இந்துமதம் முன்னோர்களின் வழிபாடே.

2. இந்துமதச் சிலைகள் மாண்ட அருளாளர்களின் பிரதிபலிப்பே. பல கைகளும், தலைகளும், வினோத அமைப்புக்களும் கருத்து விளக்கங்களே.

3. இந்துமதம் எண்ணற்ற வழிபாட்டு நிலையங்கள் மூலமும் வகைவகையாக வழிபாடுகள் மூலமும் விண்ணிலிருந்து தெய்வீக அணுக்களையும் [The Divine atoms from the streams or springs as the Divine atoms can be obtained by Temple worship] பெற்றுப் பயனடைய உதவுகிறது.

4. இந்துமதம்தான் தனிமனித விருப்பம் போல் எப்படி வேண்டுமானாலும் பூசை செய்ய அனுமதிக்கிறது. அனைத்தும் கடவுளின் வடிவம்தான்.

5. உலகின் முதல் மதமான இந்துமதத்தால்தான் மனித வெறிகளை, வெறுமைகளை, வறுமைகளை, பேராசைகளை, அகம்பாவ ஆணவச் செயல்களை, ... முழுமையாகத் தடுத்து நிறுத்த முடியும்.

6. இந்துமதம்தான் எல்லா மொழியிலும் இறைவழிபாடு செய்யலாம். எந்த மொழியும் அடுத்த மொழியை அடிமைப்படுத்தக் கூடாது என்று கூறுகிறது.

7. இந்துமதம்தான் எல்லா மொழிவழி இனங்களை தன்னாட்சி பெற்று ஒற்றுமையோடு வாழுவதுதான் அரசியல் ஒற்றுமையாகும் என்று கூறுகிறது.

8. இந்துமதம்தான் எல்லாக் கடவுள்களும் போர்க்கோலத்தில் இருப்பதன்மூலம் போரால்தான் அமைதியை, உரிமையை, விடுதலையை, பண்பாட்டை, நாகரிகத்தை, மொழியை, ... முழுமையாகப் பாதுகாக்க முடியும் என்று கூறுகிறது.

9. இந்துமதம்தான் விண், மண், பயிரினம், உயிரினம், பிறப்பு, இறப்பு முதலிய அனைத்துக்கும் முழுவிளக்கம் கூறுகிறது.

10. இந்துமதம்தான் உலகுக்கும் முந்திய பரம்பரைக் குருமார்களைப் பெற்றிருக்கிறது.

11. இந்துமதம்தான் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று, தன்மான உணர்வு, தன்னம்பிக்கை, ஒற்றுமை, பற்று, பாசம், நட்பு, தோழமை, கடமை, நன்றி, பொறுப்பு, பொறுமை, கனிவு, சமாதானம், சமத்துவம், சகோதரத்தத்துவம், பொதுவுடமை, ... முதலிய பண்புகள் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரச் செய்கிறது.

12. இந்துமதம்தான் ஏழை, எளிய பாட்டாளிப் பாமர மக்களின் வழியாக, வழித்துணையாக, வழிகாட்டியாக இருக்கிறது.

13. இந்துமதம்தான் இனத் துரோகிகளையும், விரோதிகளையும் கண்டித்துத் திருத்தும் ஆற்றலுடையது.

14. இந்துமதம்தான் தமிழர்களை முழுமையாக எல்லாத் தியாகங்களையும் செய்து தமிழகம் என்ற வடிவமைப்பையும் வாழ்வியலையும் உருவாக்கித் தரும். இதனைச் சோதனையின் சாதனையாக ஏற்றுத் தென்னிந்திய மாநிலங்கள் இந்துமதத்தால் வடிவப்படும். பிறகு வட இந்திய மாநிலங்கள் தாமாகவே இந்துமதத்தால் வடிவப்படும்.

15. உருவ வழிபாடு, கோயில் வழிபாடு, அருவ வழிபாடு, வெட்டவெளி வழிபாடு, ... முதலிய அனைத்துமே

பதினெண்சித்தர்களின் அருளுலகச் சாதனைகளால் கல், மண், மணல், பயிரினம், உயிரினம், ... முதலிய அனைத்துமே கடவுளாக்கப் படமுடியும் என்ற பேருண்மையின் அடிப்படையில் செழித்தவைதான்.

16. இந்துமதம்தான் அண்டபேரண்டங்களில் உள்ளவர்களில் 48 பேர்களையும், விண்வெளியில் இயங்குபவைகளில் 48 பொருள்களையும், மனிதர்களுக்கு அருளணு வழங்குவதில் உதவ 48 வகையான வழிபாட்டு நிலையங்களையும் மனிதர்களுக்கு அருளுலக வாழ்வு வழங்க 48 வகையான அருட்பட்டங்களையும், மனிதர் எளிதில் அருளைப் பயன்படுத்த 48 அருட்கலைகளையும் அருட் [பள்ளியில், கல்லூரியில்] கல்வியில் 48 பத்திநிலைகள், 48 சத்திநிலைகள், 48 சித்திநிலைகள், 48 முத்திநிலைகள் என்ற முறையான திட்டங்களையும் (A clear, finite, determined, classified stages in the curricular system of the Divine Education or Educational Schemes) கோவில் நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்புச் சட்டங்களை 1) விதிகள் 48, 2) படிகள் 48, 3) மரபுகள் 48, 4) ஒழுகலாறுகள் 48 5) சாத்திறங்கள் 48, 6) தோத்திரங்கள் 48, 7) சூத்திறங்கள் 48, 8) நூல்கள் 48, 9) நேத்திறங்கள் 48, 10) அத்திறங்கள் 48, ... என்று ஒரே எண்ணிக்கையில் நினைவில் நிற்கும்படியாகவும் வழங்குகிறது.

17. இந்துமதம் ஒன்றுதான் பெண்ணினத்தைப் பூரிப்போடும், பெருமிதத்தோடும், உரிமையோடும் எல்லா வழிபாட்டு நிலையங்களுக்குள்ளும், எல்லா வகையான வழிபாடுகளிலும் வருகை தரலாம், பங்கு பெறலாம் என்று அனுமதிக்கிறது. இன்னும் கூறப்போனால் பெண்ணையே தெய்வமாக வைத்துப் பூசை செய்யும் மரபு இந்துமதத்தில்தான் இருக்கிறது. [1. ஏந்தரீகப் பூசை, 2. தாந்தரீகப் பூசை, 3. மாந்தரீகப் பூசை, 4. வாலைப் பூசை, 5. கன்னிப் பூசை, 6. குமரிப்பூசை, 7. ஏழுபருவத்துப் பெண்டிர் பூசை அருள்வானின் வானவில் போன்று 'ஏழு வகைப் பூசை' மூலம்தான் சத்தியை சித்தி செய்ய முடியும். தாய் வழிபாடு, அன்னை வணக்கம், ஆத்தாள் பூசை, அம்மை கும்பிடு, ஆயாள் தொழுகை என்று குருபாரம்பரிய வாசகம் விளக்குகிறது.]

18. பெண்ணே அனாதிசத்தி, ஆதிசத்தி, பாதிசத்தி, மீதிசத்தி, ... என்பதால் தீட்டு என்றும், விதவை என்றும் பெண்ணை ஒதுக்காதே என்று குருபாரம்பரிய வாசகம் கூறுகிறது. [Sex is not a Taboo]

19. இந்துமதம்தான் உலக மதங்கள் அனைத்தையும் தனது குழந்தைகளாக ஏற்றுப் போற்றுகிறது.

20. இந்துமதத்தால்தான் சமாதான வழியில், அன்பு வழியில், அமைதி வழியில் எல்லா மொழிகளுக்கும் இனங்களுக்கும் விடுதலை வாங்கித் தரமுடியும்.

21. இந்துமதத்தால்தான் உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும் உருவாக்கித் தரமுடியும்.

22. இந்துமதம்தான் பகுத்தறிவு மதம், விஞ்ஞானமதம், வரலாற்று மதம், எளிய செயலியல் மதம் ...

... ... ... என்ற கருத்துக்களைப் பரப்புங்கள்.

9) இனியும் காலதாமதம் செய்யாது கருத்துப் புரட்சி! எண்ணப் புரட்சி! சிந்தனைப் புரட்சி! தத்துவப் புரட்சி! செய்யப் புறப்படுக!

இந்துமதத் தந்தை
குருமகாசன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரர்
18/2/84

//உண்மை நகல்//

# இரண்டாவது முப்பெருவிழா முயற்சிப் பணிக் கருத்தோவியங்கள்

<u>அருளுபவர்</u>

தலைவர், குருதேவர், ஞானத்தந்தை

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி

குருமகாசன்னிதானம்

ஞாலகுரு சித்தர் கருவூரர்

இந்து மறுமலர்ச்சி இயக்கம்,

அருட்பணி விரிவாக்கத் திட்டம்,

அருளுலக ஆர்வலர் திருக்கூட்டம்

**வெளியிடுபவர்**

சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தர்நெறி ஆர்வலர்கள், ஆதரவாளர்கள்

**<u>நலம் நாடும் செயல் ஊக்கத் திருவோலை</u>**

24.10.83இல் ஞானத்தந்தை, குருதேவர், அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர் அவசர அவசியமாக அருள்மிகு சித்தரடியான் பாண்டியன் (மேலமடை) அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் **<u>‘நலம் நாடும் செயல் ஊக்கத் திருவோலை’</u>** (வடிவேல் நிலையம், சாத்தமங்கலம், கலெக்டர் ஆபீசு அருகில், மதுரை - 625020).

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் திருவருளால் யாவும் நலமே! வெற்றியே! உண்மையே! நிறைவே! மகிழ்ச்சியே!

2) தங்களின் முகவரி எம்மிடம் கொடுக்கப்படவில்லை. நேற்று ஞாயிறு தங்கள் வட்டார நண்பர் இராசாராம் (மாட்டுத்தீவன உற்பத்தியாளர்) இங்கு வந்து தனது தொழில்நிலை, மனைவி நிலை, குடும்ப நிலைகள்... முதலியன விளக்கினார். **<u>அவருக்கு அருள் யோகம் குறைவு</u>**. எனவே, எம்மால் அருளை வழங்கவே இயலவில்லை. **ஏவல், சூன்யப் பாதிப்புகள் உள்ளன.** அவர்தான் தங்களின் முகவரியை வழங்கினார். உடனே பதில் அனுப்புகிறோம்.

3) தாங்கள் பேரார்வம் கொண்டு முப்பெருவிழா மாபெரும் வெற்றி பெற உழைத்தமையைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். வீடு, தமிழ்நாடு, தென்னிந்தியா, இந்தியா, உலகம், ... என்று படிப்படியாக அருளாட்சி அமையப் பாடுபடுவோம். **<u>தாங்கள் பெருவீரம் காட்டிச் செயல்படல் வேண்டும்.</u>**

ஊழ்வினை, விதி, வினை, பழம்பிறப்பு, ... அனைத்தும் தங்களை ஞானகுருவிடம் சேர்த்துள்ளன. எனவே, **<u>இல்லற நெறியில் இனிது</u>** இயங்கியபடியே சித்தர் நெறி தழைக்க உழைக்கப் பெருவீரர்களைத் தயாரிக்கும் பணி தங்களிடமும் ஒப்படைக்கப் படுகிறது. புரிந்து, விருப்பமுடன், பேரார்வம் ஊற்றெடுக்கச் செயல்படுக.

4) நாம் குறிகாரர்களோ! மந்திரவாதிகளோ! பூசாறிகளோ, ... மட்டும் அல்ல. **<u>ஒரு மாபெரும் தத்துவத்தால் உலக ஏற்றத் தாழ்வுகள், ஏமாற்றுக்கள், கேடுகள், தீமைகள், வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள், போர்கள், வறுமைகள், பற்றுக் குறைகள், வம்புகள், ஆணவங்கள், அநியாயங்கள், சுரண்டல்கள், ஊழல்கள், ... முதலிய அனைத்தையும் அகற்றப் புறப்பட்டிருக்கும் அருளாளர்களாவோம்.</u>**

“யார் வந்தாலும் அவர்களை அருளாளர்களாக ஆக்கிடும் புரட்சிகரமான ஆற்றலும், செயல்திட்டமும் உடைய நம்மால்தான் நாத்திகம், கடவுள் மறுப்பு, மதவெறுப்பு, ... முதலிய அனைத்தையும் அமைதியான முறையில் தீர்த்து வைக்க முடியும், இல்லாமல் செய்ய முடியும். ... ...” என்ற பேருண்மையை உணர்த்திச் செயல்படுக.

5) ‘இ.ம.இ.’, ‘அ.வி.தி.’ இரு அமைப்புக்களுக்கும் **கிளை அமைப்புக்களை உருவாக்கி, ‘விளம்பரப் பலகை’, ‘பதிவேடுமுறை’, அச்சிட்ட உறுப்பினர்**

**அட்டை', 'மாத உறுப்பினர் தொகைச் சான்று'** ... ... முதலியவைகளை உருவாக்கிச் செயல்படுங்கள்.

6) **'நிறுவனங்களின் கட்டமைப்பும், உறுதியும், ஒழுங்கும் வலிமைப்படல் வேண்டும்.' 'நிர்வாகத்தில் நேர்மையும், திட்டமிட்ட சீரான நடைமுறைகளும், சட்டதிட்டங்களும் இருத்தல் வேண்டும்' - அப்பொழுதுதான் அரசியலையும் வென்று சீர்திருத்திச் 'சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்' அமைக்கும் சித்தர் நெறி** வெற்றி பெறும்.

7) அறிக்கைகள், சிறிய புத்தகங்கள், உறுப்பினர் பதிவு அட்டை, சந்தாச் சான்று ஏடு, ... முதலியவை அச்சிடும் பொறுப்பை அன்பு கூர்ந்து நிறைவேற்றப் பாடுபடுங்கள். உங்களை நம்புகிறோம், ஏற்கிறோம். பொறுப்போடும் பொறுமையோடும் செயல்படுக!

வாழ்க! வளர்க! வலிமை பெறுக! வளம் சிறந்திடுக!

அன்பு

ஞானத்தந்தை
குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரார்
24.10.83

## <u>அஞ்சல்களிலிருந்து சிந்தனையுரைகள் சில:</u>

### (I) உடம்பைப் பற்றி:

1) "அருளாளர்களின் வாழ்வில் உடல் நோய்கள் தோன்றுதல் மிகமிகச் சாதாரணம். இதைத்தான், திருமூலர்

**'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'**

**'உடம்பை வளர்த்தேனே உயிரை வளர்த்தேனே'**

**'உடம்பைப் பேணலே சிறந்த இறை வழிபாடு'**

**'உடம்பே கடவுள் வாழும் நடமாடும் கோயில்'**

... ... ... என்று புரட்சிகரமாகத் துணிந்து கூறியிருக்கிறார்."

2) இதைத்தான், தாத்தாக்கள், "... ... 'சித்தர் நெறி உலகியல் அடிப்படைகளுக் கெல்லாம் அடிப்படை; அச்சங்களுக் கெல்லாம் அச்சம்', 'கூச்சங்களுக்கெல்லாம் கூச்சம்', 'மாச்சரியங்களுக்கெல்லாம் மாச்சரியம்', 'மானிடக் கற்பனைகளுக் கெல்லாம் கற்பனை', 'அறிவுரைகளுக் கெல்லாம் அறிவுரை' ... ..." என்று <u>குருபாரம்பரியத்தில்</u> எழுதியுள்ளார்கள்.

3) இதனால்தான், 'உயிர், ஆவி, ஆன்மா' எனும் மூன்றையும் இணைக்க இட்டும் தொட்டும் சுட்டியும் அருள்வழங்கும் முறையை யாம் நல்ல பக்குவம் வந்தவர்க்கே வழங்குகிறோம். நமது சன்னிதானங்களையும் இப்படியே செயல்படச் சொல்லுகிறோம். அதாவது, **எவரும் எளிதாக அவசரப்பட்டுச் சித்தர் நெறி முறைகள் அநாகரிகமானவை, வெறி நிறைந்தவை, உலகியலுக்குப் புறம்பானவை, ... ... என்று குறைகூற வாய்ப்புத் தராமல் செயல்படலே நமது கடமை.** இருந்தும் கற்பனைவாதிகளும், கனவுலக வாதிகளும், உடம்பு, உயிர், ஆவி, ஆன்மா ... என்பனவற்றின் உறவு பற்றி உணராதவர்களும் நம்மிடையே எதிர்பாராமல் சேர்ந்து, மயங்கி, கலங்கி, குழம்பி, தயங்கி, ஒதுங்கிக் குறைகூறிடல் நேரிட்டிடுகின்றது. எனவே, மிகமிக எச்சரிக்கையாகவே அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ... உருவாக்கப்படல் வேண்டும்.

### (II) யாம் உருவாக்கிய அருளாளர் பற்றி:-

1) யாம், எமது பயிற்சிக்குரிய காலங்களிலும் முயற்சிக்குரிய காலங்களிலும் உருவாக்கிய பல நூறாயிரக் கணக்கான அருளாளர்கள் மலைமுகடுகள், அடவிகள், குகைகள், படுகைகள், கடல்கள், தீவுகள், குக்கிராமங்கள், பட்டிதொட்டிகள், நாடுநகரங்கள், ... ... என எங்கும் நிறைந்துள்ளார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் தன்னலமும், முதலாளித்துவ உணர்வும் கொண்டு அடங்கி ஒடுங்கி இலைமறை காயாகவே வாழுகிறார்கள். இவர்கள், பணம், பதவி, வசதியான வாழ்வு, ... முதலியவைகளை நாடிக் குறுகிய வட்டங்களுக்குள்ளேயே செயல்படுகிறார்கள். இது எமக்குத் தோல்வியே!.

2) எமக்கு ஆதரவாளர்களாகவும், ஆர்வலர்களாகவும் இருந்திட்ட தவசிகளும், ஞானிகளும், யோகிகளும் ... ... பிற அருளாளர்களும் ... ... இந்துமதத்தை ஓர் அநுபவ விஞ்ஞானமாக எளிமைப் படுத்திட்ட எம்மைப் பாராட்டி எம்மோடு சேர்ந்து மிக விரைவில் சித்தர்நெறிச் செல்வர்களாகி விட்டார்கள். இப்போது அவர்கள் இந்துமதத்தை உலக மத இணைப்புச் சத்தியாகப் பயன்படுத்தத் துடிதுடிக்கிறார்கள். இதற்காக, இந்துமதத்தால் வடிவப்பட்டு, வாழ்வுபெற்று, பெயர்பெற்று வாழும் இந்தியாவை இந்துமதப் பேரரசாக உருவாக்கப் போர்க்கோலம் பூண்டு விட்டார்கள். ஆனால், யாமோ! அனைத்தும் அமைதிவழி! அன்புவழி! அறவழி! சமாதானவழி! ... ... ... என்று செயல்படுகிறோம். எனவே, அவர்கள் எம்மைக் கோழையெனக் கூறித் தாங்களே அமைத்துப் போர்க்கள, போர்க்கால ... ... முயற்சிகளில் இறங்கியுள்ளார்கள். இதுவும் எமக்குத் தோல்வியே.

3) 1972க்குப் பிறகுதான், யாம் முழுக்க முழுக்க இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அருளாளர்களாக்கிக் 'கருத்துப் புரட்சி', 'எண்ணப் புரட்சி', 'பண்பாட்டுப் புரட்சி', ... ... முதலியவைகளை இந்துமதத்தின் ஒட்டுமொத்தத் தத்துவப் புரட்சியாக்கிட முயலுகிறோம். எம் காலத்தில்தான், யார் வேண்டுமானாலும் தொடர்ந்து முயன்றால் எத்தகைய பத்தி நிலைகளையும், சத்தி நிலைகளையும், சித்தி நிலைகளையும், முத்தி நிலைகளையும் ... ... பெற்றிடலாம் என்ற 'பகுத்தறிவுப் போக்கும்' (A rationalistic approach), 'விஞ்ஞானச் சூழலும்' (a scientific atmosphere) ... ... மதத்துறைக்குக் கிடைத்திருக்கிறது. யாம்தான் 'மதம் ஒரு விஞ்ஞானம்' (Religion is a Science), 'மதம்தான் மக்களை ஒற்றுமைப்படுத்தவும் ஒருமைப்படுத்தவும் பயன்படக் கூடிய மிகச் சிறந்த சாதனம் (Religion is the powerful means for unity and uniformity), 'மதம்தான் மனிதர்களின் தீமைகளை அகற்றும்' (Religion can alone eradicate all the ills and evils of the mankind) ... ... என்பன போன்ற அறிவார்ந்த அருளுரைகளை வழங்கிச் செயல்படும் முதல் அருளாளர். எனவேதான், எந்தவிதச் சர்வாதிகாரப் போக்கோ, கொத்தடிமைப் போக்கோ இல்லாமல் அடியான்களையும், அடியாள் - களையும், அடியார்களையும் விடுதலைப் போக்கும் வேட்கையும் உள்ளவர்களாகவே உருவாக்குகிறோம் யாம். அதனால், எமது படைப்புக்கள் அருட் புரட்சிக்குக் கருவாகவும், திருவாகவும், உருவாகவும், உயிராகவுமே ... வாழுகின்றன, வளருகின்றன.

## குருநிலை பற்றி:

1) இனிய இளைஞர்களே! கசப்பான, கடுமையான, நடுக்கத்துக்குரிய ... ... பயிற்சிகளை அடுத்தடுத்து ஆர்வமுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொண்டிட வாருங்கள். நமக்குள் 'மறை (இரகசியம்) காத்தல்', 'ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து முழுமனதுடன் செயல்படல்', 'எக்காரணம் பற்றியும் மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ, மதத்துக்கோ, தலைமைக்கோ விரோதியாகவோ! துரோகியாகவோ மாறாமல் இருத்தல்', 'பழம்பிறப்பும் மறுபிறப்பும் உணர்ந்து மனிதவாழ்வின் உறவுகளையும் உரிமைகளையும் பெருமைகளையும் முழுமையாக அருளுலக வாழ்வுக்கு வழங்கிச் செயல்படல் (சரணாகதித் தத்துவம் = முழுமையாக ஒப்புக் கொடுத்தல்)' ... ... எனும் குருபாரம்பரியக் கட்டுப்பாடுகள் தெளிவாக வலிமையோடு கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

2) பேரார்வமிக்க சித்தர்நெறிச் செல்வர்களே! யாம், "... ... கோழையின் கையில் எத்தகைய கூர்வாள் இருந்தாலும் பயன்படாது", "குருவை நம்பாதவன் எத்தகைய திருநிலைகள் பெற்றாலும் பயனில்லை", "தலைவனை அறிந்தவனே தன்னையறிய முடியும் ..." என்ற குருபாரம்பரிய வாசகங்களை குறிக்க விரும்புகிறோம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பிறரின் சூழ்ச்சிகளால் வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சி பெற்று ஆழ்ச்சி மாறாமல் கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தை விடுதலை பெற்று வீறு கொண்டு எழச்

செய்தால்தான் 'உலக ஒற்றுமை, அமைதி, நிறைவு, சமத்துவம், பொதுவுடமை, மானிட உணர்வின் மலர்ச்சி ... முதலியவைகளை மதவழிப் புரட்சியால் சாதிக்க முடியும்'. ஏனெனில், இம்மண்ணுலக மனித வரலாற்றின் தோற்றமாக, துவக்கமாக, ஆரம்பமாக இருக்கின்ற தமிழினத்தால்தான் மனிதகுல மேம்பாட்டுக்கு வழியும், வழிகாட்டலும், வழித்துணையும் நல்க முடியும்! முடியும்! முடியும்! இதனை உணர்ந்து யாம் உருவாக்கும் ஒவ்வொருவரும் அனைத்து வகையான சிந்தனைகளையும் செயல்களையும் தமிழினத்தை அடிப்படையாகவும் முடிவாகவுமே கொண்டு வளர்க்க வேண்டும்.

3) எத்தகைய ஆர்வமுள்ளவர்களுக்கும் குருதேவர் படிப்படியாக அவரவர் நம்பிக்கை, மனப்பக்குவம், கருத்து வளர்ச்சி, உணர்வு முதிர்ச்சி, தொடர் பயிற்சித் தேர்ச்சி, உலகியல் கற்பனை, அச்சம், கூச்சம், விருப்பம், ... முதலியவைகளை ஆராய்ந்துதான் பூசைகளை வழங்குவார். உருவ, அருவ, அருவுருவச் சித்திகளுக்குரிய இட்டும் தொட்டும் சுட்டியும் அருட்கொடைகளைப் புரிவார். ஆனால், யார் வந்து எந்த அருட்பட்டம் கேட்டாலும் அதை உடனே வழங்கி அருளுலக அடிப்படைப் பயிற்சிகளும், அவற்றுக்குரிய ஏதுக்களும், தோதுக்களும், பாதுகாப்புக்களும் வழங்கிச் செயல்படுபவரே குருதேவர், தலைவர், ஞானத்தந்தை, அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார். இதுவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூன்றாவது தலைவராகவும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் பன்னிரண்டாவது குருதேவராகவும் உள்ள **எமது குருநிலை பற்றிய விளக்கம்**.

குறிப்பு:-

(a) யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் அருளுலக வாழ்விலிருந்து விலகலாம். ஆனால், எவரையும் குறைகூறிக் குற்றம் சாட்டிச் செல்லக் கூடவே கூடாது. ஒவ்வொருவரும் விரும்பித்தான் அறிவு விழித்த நிலையில் உறுதிமொழிகளை வழங்கி சித்தர்நெறியில் சேருகின்றனர். இதில் வற்புறுத்தலோ, ஏமாற்றலோ, ... இல்லவே இல்லை! இல்லை! இல்லை!

(b) எந்தத் தனிமனிதரின் தவறுக்கும் குருவோ, இயக்கமோ, அருளாளர்களோ, சித்தர் நெறியோ பொறுப்பில்லை! குற்றவாளியாக முடியாது.

(c) அருளுலகப் பயிற்சிக் காலங்களில் ஏற்படும் சோதனைகளால் விளையும் துன்பங்களுக்கும், பாதிப்புக்களுக்கும் அவரவரின் ஊழும், விதியும், அறிவும், முயற்சியுமே பொறுப்பு! பொறுப்பு! பொறுப்பு!

(d) ஒவ்வொருவரும் தமது இச்சைகளோ, அச்சங்களோ, கூச்சங்களோ குருவுக்குத் தாக்குதலை வழங்கிடாமல் அடக்கமாகச் செயல்படல் வேண்டும்.

(e) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் காலத்தில்தான் அருளாளர்கள் விந்துவழி வாரிசுகளாகவும், குருவழி வாரிசுகளாகவும் வாழையடி வாழையென உருவாக்கப் பட்டிடுவர். இது பற்றிய சிறப்புக் குறிப்பாகக் குருபாரம்பரிய வாசகம் ஒன்று இறுதியாக இங்கு தரப்படுகிறது.

"... இப்பிறப்பிலேயே பதினெண்சித்தர் பீடாதிபதி இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கும் பேரின்ப நிலை அனைவருக்கும் கிடைக்காது. அப்படியே கிடைத்தாலும் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போவதும்', 'உண்பது செறிக்காமல் போவதும்', ... சாதாரணமாக நிகழ்வனவே. உலகியல் மாயைகளும், மயக்கங்களும், தயக்கங்களும், மாச்சரிய ஐயங்களும், ஆச்சரிய கூச்சங்களும் கருவிலேயே திருவுடையாராக அல்லாதாரைக் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், கைகாலிருந்தும் முடவராய், கருத்திருந்தும் பித்தராய்ச் செயல்படவே செய்திடும். அவரவரின் ஊழும் விதியும் குருவருள் சித்திக்க விடாமல் தடுப்பதை அறிவாலும், அடுத்தடுத்து முயல்வதாலும்,

குருபத்தியாலும் வெல்லுவது அனைவருக்கும் எளிதாகாது.... .... ....”

-குருபாரம்பரிய வாசகம்

**இயக்கம் பற்றி:-**

1) இம்மண்ணுலகில் தோன்றிய அருளாளர்கள் பெரும்பாலும் தனி மரங்களாகவே செயல்பட்டுச் சென்றுள் - ளார்கள். அதனால்தான், அருளுலகச் சர்வாதிகாரங்களும், சுரண்டல்களும், ஏமாற்றுக்களும், பொதுவுடமை விரோதப் போக்குகளும், ... ... அவ்வப்போது தோன்றி மறைகின்றன.

2) யாம், மக்களோடு மக்களாகக் கலந்து பழகி அருளுலக வளர்ச்சிகளுக்கும், மலர்ச்சிகளுக்கும், செழுச்சிகளுக்கும் உழைக்கிறோம்.

3) யாம், எமது வாழ்வைத் **‘தெய்வீக சோதனை’** (The Test of Divinity) என்ற முறையிலேயே விழிச்சி நிலையில் நடத்தி வருகிறோம். **“எமது வாழ்க்கை, இம்மண்ணுலகுக்கும் முன்பே அண்ட பேரண்டங்களில் வளமாகச் செழித்துள்ள அருள்துறையின் முறையான முழுமையான வரலாறு’** என்ற பேருண்மைக்கு விளக்கமே எமது ஒவ்வொரு சொல்லும் செயலும்.

4) யாம், ஒரு மாபெரும் தத்துவத்தின் நேரடி உரிமை வாரிசு என்பதால், யாமும், எம்மைச் சார்ந்தவர்களும் தத்துவப் பிடிப்பும், பற்றும், விருப்பும், நம்பிக்கையும், நோக்கும், போக்கும், ... உள்ளவர்களாகவே என்றென்றும் இருப்போம். என்றைக்கும் தத்துவத்தை அடகு வைத்தலோ, விற்றலோ, மாற்றலோ, குறைத்தலோ, திருத்தலோ, ... எங்களிடம் இருக்கவே இருக்காது. நாங்கள், தத்துவ நாயகர்களாக, காவலர்களாக, தொண்டர்களாக எப்போதும் இருப்போம். எனவே, எங்களால்தான் பொருளுலக வெறிகள், ஏமாற்றுக்கள், சுரண்டல்கள், ஊழல்கள், அதிகார முறைகேடுகள், சர்வாதிகாரங்கள், ஏகபோக முதலாளித்துவங்கள், ... முதலிய அனைத்தும் அகற்றப்படும், அழித்தொழிக்கப் படும்.

5) அருளாட்சி விரைவில் தாய்நாட்டிலும், படிப்படியாக உலகெங்கும் அமைப்பதற்காகப் பல நூறுயிரக் கணக்கான அருளாளர்கள் விரைவில் செயலில் இறங்குவார்கள். ஆனால், சிறந்த தத்துவமும், செயல்திட்டமும் உடைய இ.ம.இ.யும், அ.வி.தி.யும் எல்லோருடனும் கலந்து செயல்படும். ஏனெனில், இதற்குத்தான் மேற்படி இரண்டும் எந்தவிதக் குறுகிய வெறியும் இல்லாதவை.

ஓம் திருச்சிற்றம்பலம்.

அன்பே சிவம்

அன்பு
ஞானத்தந்தை குருமகாசன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரர்
28.10.83

/உண்மை நகல்/

**<u>இந்து மறுமலர்ச்சி இயக்கம்</u>**

**<u>அருட்பணி விரிவாக்கத் திட்டம்</u>**

வைகாசிப் பருவ பூசை விழா;
உண்மையான இந்துமத ஞானம் வழங்கு திருவிழா;
இந்து மறுமலர்ச்சி விழா; தமிழ் கூறும் நல்லுலக விழா;
அருள்நெறியாளர்கள் எழுச்சி விழா;
ஆத்தாளை அழைத்துப் பூசிக்கும் விழா;
சமுதாயப் புரட்சி விழா; பண்பாட்டு வளர்ச்சி விழா;
கண்டவர் விண்டிடும் விழா; விண்டதைப் பிறர் காணச்செய்திடும் விழா;
அகவிருள் அகற்றும் விழா; புறவிருள் போக்கும் விழா;
நாட்டுக்கு நலமளிக்கும் விழா; மதங்களை இணைத்திடும் விழா;
அருளாட்சி அறிவிப்பு விழா; அருளாட்சி அமைப்பு விழா;

**அருளாட்சி அழைப்பு விழா**

பதினெண் சித்தர்கள் மணீசர்களை [மண் + ஈசர் → மண்ணுலக உயிரினங்களின் தலைவர்கள்] மேம்படுத்திப் பண்பாடும் நாகரிகமும் பெற்று மனிதர்களாக்கிடத் [ மனதை உடையவர் → அகப்பண்பாடு + புறநாகரிகம்] தங்களுடைய விண்வெளி மதமான 'இந்து மதத்தைத் தங்களின் தாய் மொழியான தமிழில் வழங்கினார்கள். அம்மதம் கிரேதாயுகம் 17,28,000 ஆண்டுகள் + திரேதாயுகம் 12,96,000 ஆண்டுகள் + துவாபரயுகம் 8,64,000 ஆண்டுகள் + கலியுகம் 5,111 ஆண்டுகள் [ 2010 ஆம் ஆண்டில்] ... என்று வாழ்ந்து வளர்ந்து மானுடரைக் காத்து வந்திருக்கிறது.

இவ்வளவு பெரிய, நெடிய, நீண்ட ... இடைவெளிக் காலத்தில் மனித மறதியால், கற்பனையால், கனவால், சூழ்ச்சியால், தன்னலத்தால், வெறியால், ... சில தேவையற்ற, பயனற்ற மடமைகள் இந்துமதத்தில் தோன்றி விட்டன. அவற்றையும் அகற்றித் தூய்மைப்படுத்தி இந்து மதத்தை உலக மானுடர் உய்வு நெறியாக ஆக்கும் பணியை பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, இந்து மதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்கள் துவக்கியுள்ளார்கள். இவருக்கு முன் பதினோரு பதினெண் சித்தர் பீடாதிபதிகள் இப்பணியை அவ்வக் காலங்களுக்கேற்பச் செய்துள்ளனர். இவருக்குப் பின் தேவைக்கேற்ப முப்பத்தாறு பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றி, அவ்வக்காலங்களுக்கேற்ற மறுமலர்ச்சிப் பணிகளைச் செய்வர். எனவே, மானுட இனம் இம்மண்ணுலகில் வாழப் போகும் கலியுக முடிவு வரை 43,14,080 ஆண்டுக்காலம் முழுவதும் பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் இந்துமதம் தொடர்ந்து புதுப்பிக்கப் பட்டு, மறுமலர்ச்சி செய்யப்பட்டு மானுடரை உய்வுப்படுத்தும் நெறியாகவே இருக்கும்.

மதவழியே இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும்
மித இதவழி
இந்துமதமே தமிழின மொழி நாட்டுப்பற்றைச்
செயல்நிலைப்படுத்தும்
மணீசர்களை மனிதர்களாக்கும் சித்தர் நெறியே
உண்மையான இந்துமதம்

காயந்திரி மந்தரத்தால் தன்னையறிந்து
தலைவனைத் தெரியலாம்
கலசப்பூசையால் தலைவனையறிந்து தன்னைத்
தெரியலாம்
குண்டலினிப் பயிற்சியால் குருவையறிந்து
திருவைப் புரியலாம்
பிறாணாயாமத்தால் பிண்டம் அண்டம் அறிந்து
வெல்லலாம்

--- **குருவாக்கு**

ஊனநிலை ஒழித்து மெய்ஞ்ஞான நிலை
பெற்றிடவே
கானகமும் வானகமும் வாழக் கற்றிடு
குருவிடமே
ஆனதற்கும் போனதற்கும் புலம்பிடாதே

-- **குருபாரம்பரியம்**

இந்துமதத்தின் மறுமலர்ச்சியே மானுடச்செழுச்சி!
இந்துமதச் செழுச்சியே உலகப் பொதுவுடமை
வளர்ச்சி;
இந்துமத உயர்ச்சி உலகச் சமத்துவ ஆட்சி;
இந்துமத உணர்ச்சி இனவிடுதலை மீட்சி;
இந்துமதப் பயிற்சி சுரண்டுவோர் சூழ்ச்சிக்கு
வீழ்ச்சி;
இந்துமதமே உலக ஆன்ம நேய ஒருமைப்
பாட்டைத் தரும்!
இந்துமதமே அனைத்தையும் கடவுளாக்கும்
ஆற்றலுடையது!
இந்துமதமே அனைத்தையும் கடவுளாக்கும்
ஆற்றலுடையது!
இந்துமதமே உலகச் சமூக விஞ்ஞானம்!
இந்துமதமே பகுத்தறிவின் தாய்!
இந்துமதமே தன்னையும் பின்னையும்
முன்னையும் உணர்த்தும்!

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**

**கடவுளை வழிபடுவோர் கழகம்**

**அருளுலக ஆர்வலர் கழகம்**

**உலக அருளாளர் திருச்சபை**

**உலக மத ஆய்வுக் குழு**





**BOOK POST**

To

**If Undelivered please return to:**

Forum of Siddharadiyaans
C/O Mr V.Muniraju
Survey No.34, DoorNo.345,
Outer Ring Road, Bellandur Post,
Bangalore East 560103
Cell: 09972130609